1987 மே 11]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்.)

திரு. அ. ரகுமான்கான் : இதை அப்போஸ் பண்ணுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெலிபரேஷன் வரும் போது பேசலாம். I will record your objections.

திரு. அ. ரகுமான்கான்: சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இவர்கள் நடத்தை பற்றி விமர்சனங்களை, திரைப் படங்களில். . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் அவசரப்படுகிறீர்கள்? இது வேறு பில். இது வணிக வரித்துறை.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

(திருவாளர்கள் கே. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் அ. ரகுமான்கான் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

MR. SPEAKER: I will record the objections of the three hon. members.

டிபேட் வரும்போது நீங்கள் பேசலாம். இப்போது யாரும் இதில் பேசமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

சட்டமன்ற பேரவை
TRUTH ALONE TRIUMPHS